குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 4

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாணிக்கம் | ஜாதி | |
| தந்தை பெயர் | சின்னப்பநாடார் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.24 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. Kanagaraj present for A1. Advocate Mr. A.Nagenthiran present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் பூம்பட்டி காட்டு வளவில் குடியிருந்து கொண்டு நான் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 14.08.2018 ம் தேதி மாலை 05.00 மணியளிவல் பூம்பட்டி காட்டு வளவில் நான் இருந்த போது கிழக்கு பக்கம் சத்தம் கேட்டது அங்கு சென்று பார்த்த போது அ.சா.1 ரித்திகா அழுது கொண்டு இருந்தார். அவரை விசாரித்த போது 2 நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து அவர் கழுத்தில் அணிந்து இருந்த 5 பவுன் நகையை பறித்துக் கொண்டதாக சொன்னார்.

2. மேலும் அவர் தொளசம்பட்டியில் உள்ள தனியார் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிவதாக சொன்னார். அவர் வேலை முடித்து இருசக்கர வாகனத்தில் வந்த போது சம்பவம் நடந்ததாக சொன்னார். போலீசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்த போது எனது அருகில் யார் இருந்தார்கள் என்று தற்போது எனக்கு நினைவில்லை. சம்பவத்தின் போது போலீசார் சம்பவ இடத்தில் இல்லை. போலீசார் சுமார் 06.30 – 07.00 அளவில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. (1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது மேலும் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்கிறது.) சம்பவம் நடந்த உடன் நான் போலீசாருக்கு தகவல் கொடுக்கவில்லை என்றால் சரி. சம்பவத்தன்று போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் சரி. அதன்பின்பு போலீசார் என்னை விசாரக்கவில்லை என்றால் சரி. போலீசார் இவ்வழக்கு தொடர்பாக என்னிடம் கையெழுத்து பெறவில்லை. அ.சா.1 தலைமை ஆசிரியர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீடு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 100 அடி தூரத்தில் இருந்ததால் எனக்கு சத்தம் கேட்டு இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.42 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.